
பக்கங்கள்:-17

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2054 | ஐப்பசி 01 | புதன்கிழமை | 18.10.2023 | அதிர்வு 78

## குருந்தூர்மலையில் திடீரென ஒன்றுகூடிய அரச அதிகாரிகள்



05

# இந்தோனேசிய ஜனாதிபதியுடன் ரணில் சந்திப்பு

## இந்து சமுத்திரத்தின் தனித்துவத்தை வலுப்படுத்துவதன் மூலம் இரு நாடுகளின் உறவைப் பலப்படுத்துவது தொடர்பில் கவனம்

இந்து சமுத்திரத்தின் அடையாளத்தை வலுப்படுத்தி இலங்கைக்கும் இந்தோனேசியாவுக்கும் இடையிலான அரசியல், பொருளாதார மற்றும் கலாசார உறவுகளை பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

"ஒரே பட்டி – ஒரே பாதை" சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காகச் சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும்

02



## 'சனல் 4' குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கான

# விசேட தெரிவுக்குழு பயனற்றது; இது மக்களை ஏமாற்றும் முயற்சி

## சபையில் சாடிய எதிரணி

**"உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல் 4' முன்வைத்துள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழு பயனற்றது. இது மக்களை ஏமாற்றும் முயற்சி."**

**- இவ்வாறு நாடாளுமன்றத்தில் நேற்றுச் சாடியுள்ளது எதிர்க்கட்சி.**

03



# தீர்வு காண ரணிலுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் தமிழ்த் தலைவர்கள்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கோரிக்கை



"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படக் கூடிய தலைவர் என்ற வகையில், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழ் அரசியல் தலைவர்கள் ஜனாதிபதியின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்."

– இவ்வாறு வர்த்தக இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

"எமது நாடு பொருளாதார

03

# தமிழ் அரசுக் கட்சியும் ஹர்த்தாலுக்கு ஆதரவு

## சுமந்திரன் எம்.பி. அறிக்கை



"முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியும் நீதிவானாகவும் இருந்த ரி.சரவணராஜா, தனது நீதித்துறை கடமைகளைச் செய்த காரணத்தால் அச்சுறுதலுக்கு உள்ளாக்கப்பட்டு பதவியிலிருந்து இராஜிநாமா செய்து நாட்டை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டதை எதிர்த்து

02




மற்றைய ஆறு தமிழ்க் கட்சிகள் ஒன்றுசேர்ந்து நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முன்னெடுக்க அறிவித்துள்ள கடையடைப்புக்கு (ஹர்த்தாலுக்கு) தமது கட்சியின் ஆதரவையும் வேறு வழியின்றி வழங்குவது என்ற முடிவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு நேற்றிரவு இணைய வழியில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு செய்து விட்டது.

எனினும், இந்தக் கூட்டத்தில்

02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித்தலைவர்மாவைசேனாதிராஜாவுக்கு 'செம' அர்ச்சனை என்று தகவல். கட்சி யோடோ, கட்சியின் அடுத்த கட்ட தலை வர்களோடோ, அரசியல் குழுவோடோ கலந்துரையாடாமல், இதுபோன்ற கூட்டு முயற்சிகளில் கலந்து கொண்டு, தம்பாட்டில், சுய இச்சைப்படி, தலைவர் முடிவெடுத்து, பகிரங்கப்படுத்தி விட்டு வந்தால், அரசியல் குழு எதற்கு என்ற சாரப்பட பலரும் வெளுத்து வாங்கினர். மாவையருக்கு வெறுமனே செவிமடுத் துக் கொண்டிருப்பதைத் தவிர, வேறு வழி இருக்கவில்லை.

அந்தக் கடையடைப்புக்கு ஆதரவு தெரிவிப்பவராகத் தம்பாட்டில் முடிவெடுத் துத் தலைவர் அறிவித்துள்ள நிலை யில், அவரைக் கைவிடக்கூடாது என்ப தற்காகக் கடையடைப்பை ஆதரித்து ஓர் அறிவித்தலை – அறிக்கையை – வெளியிடுவதுடன் அடங்கிக் கொள்வது என்று அரசியல் குழு நேற்றிரவு முடிவு செய்ததாகத் தெரிய வந்தது.

அந்த அறிக்கையை வெளியிடும் பொறுப்பு நேற்றைய கூட்டத்தில் வைத்து சுமந்திரனிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஏனையோருடன் கலந்தாலோசிக் காமல், அவசரக் குடுக்கையாக தலை வர் மாவை சேனாதிராஜா இத்தகைய விடயங்களில் தம்பாட்டில் முடிவெடுப் பதை நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஸ்ரீதரன், சுமந்திரன், சாணக்கியன் மற்றும் சிவஞானம் ஆகியோர் கண்டித் தனர். கலையரசன் எம்.பியும், கட்சிச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கமும் இவ்விடயத்தை ஒட்டி அதிகம் கருத்து வெளியிடவில்லை.

ஒட்டுமொத்தத்தில், இந்தக் கடையடைப் பில் இணைவதில் கட்சிக்குள் வரவேற்பு கிஞ்சித்தும் இருக்கவில்லை. எனினும், அதில் இணைவது என்று கட்சித் தலைவர் பகிரங்க வெளிப்படுத்தலை செய்திருக் கின்றமையால், கடையடைப்பு நடவடிக் கையை எதிர்க்காமல், ஆதரிப்பதாக ஓர் அறிக்கையை வெளியிட்டு, ஒதுங்குவதாக அரசியல் குழு முடிவு செய்திருக்கிறது.

கிழக்கில் மயிலத்தமடு மேய்ச்சல் தரை ஆக்கிரமிப்பு விவகாரத்தில் அந்த மக்களுக்கு ஆதரவாக வடக்கில் ஒரு போராட்டத்தை முன்னெடுக்காமல் வாளாவிருந்து விட்டு, வடக்கில் நீதிப திக்கு அச்சுறுத்தல் என்று கிழக்கையும் சேர்த்துக் கடையடைப்புக்கு கோருவது நியாயமா என்று மாவை சேனாதிராஜாவி டம் நாக்கைப் பிடுங்குவது போல ஒரு கேள்வி அக்கூட்டத்தில் எழுப்பப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

இந்தக் கடையடைப்பு தொடர்பில் இன்னொரு விடயமும் இருக்கின்றது. நாளை மறுதினம் உத்தேச கடையடைப்பு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதற்கிடை யில், நாளை நடிகர் விஜயின் 'லியோ' திரைப்படம் பெரும் பரபரப்புக்கு மத்தி யில் திரைக்கு வருகின்றது. இரண்டு, மூன்று வாரங்களாவது தொடர்ந்து முழு 'ஹவுஸ்புல்' அளவில் திரைப்படம் ஓடும் என்று நம்பப்படுகின்றது. அது வெளியாகி அடுத்த நாள் கடையடைப்பின் பெயரில் தியேட்டரை மூட – படக் காட்சியை முழு நாளும் நிறுத்த – தியேட்டர்களும் விஜய் ரசிகர்களும் அனுமதிப்பார்களா என்பது பெரும் கேள்வியே. கடை அடைப்பு ஒரு பக்கமும் லியோ பட ஓட்டம் மறுபக் கமும் தன்தன்பாட்டில் நடக்குமோ..என் னவோ...?

தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுவது குறித்து நேற்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் ஏதேனும் பிரஸ்தாபிக்கப் படாத போதிலும், தேசிய மாநாட்டுக்கு முன்னோடியான கட்சியில் மத்திய குழுக் கூட்டத்தைக் கூட்டுமாறு தாம் வழிப்படுத் தியும், கட்சியின் செயலாளர் அதைச் செய்யவில்லை என்று குறை கூறினார் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா. அடுத்த ஐந்தாம் திகதி அதைக் கூட்ட நேற்றைய கலந்துரையாடலில் தீர்மா னிக்கப்பட்டதாக அறியவந்தது.

## தமிழ் அரசுக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 20 ஆம் திகதி வெள்ளிக் கிழமை வடக்கு, கிழக்கில் பூரண ஹர்த் தால் அனுஷ்டிக்குமாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் அனைத்து மக்களையும் கேட்டுக்கொள்கின் றோம்."

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் அறிக்கையூடாக வேண்டுகோள் விடுத் துள்ளார்.

"இந்தக் கடையடைப்பு நடவடிக்கை மூலம் தமிழ் நீதிபதி ஒருவருக்கு நிகழ்ந்த இந்த மிக மோசமான செயற்பாட்டை திரும்பத் திரும்ப உலகுக்கு எடுத்துக் காட்ட நாம் கடமைப்பட்டுள்ளோம். ஆகவே. இது சம்பந்தமாக அனைவரி னது ஒத்துழைப்பையும் முழுமையாக எதிர்பார்க்கின்றோம்." – என்றும் அந்த அறிக்கையில் சுமந்திரன் எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## இந்தோனேசியா ஜனாதிபதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தோனேசிய ஜனாதிபதி ஜோகோ விடோடோவுக்கும் இடையிலான உத்தி யோகபூர்வ சந்திப்பு நேற்றுக் காலை பீஜிங்கில் இடம்பெற்றதுடன் இது தொடர் பில் இரு நாட்டுத் தலைவர்கள் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

அண்மைய பொருளாதார நெருக்கடி மற்றும் பாம்ஒயில் மீதான தடை காரண மாக இரு நாடுகளுக்கும் இடையிலான ஏற்றுமதி – இறக்குமதி நடவடிக்கைக ளில் ஏற்பட்ட தாக்கம் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

ஆசிய நாடுகள் பலவற்றுடன் சுதந் திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற் கொள்ளவும் இந்தியாவுடனான சுதந்திர வர்த்தக உடன்படிக்கையை முறைப்படுத் தவும் இலங்கை செயற்பட்டு வருகின்றது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

இந்தோனேசியாவுக்கும் இலங்கைக் கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக் கையை ஏற்படுத்துவதற்கு இது மிகவும் பொருத்தமான சமயம் என இந்தோ னேசிய ஜனாதிபதி தெரிவித்தார்.

உலகப் பொருளாதாரம் மற்றும் அரசியல் போக்குகள் மற்றும் ஆசிய பிராந்தியத்திலுள்ள சிறிய நாடுகள் என்ற வகையில் அந்த சவால்களை எவ்வாறு எதிர்கொண்டது என்பது குறித்து இரு நாட்டுத் தலைவர்கள் நீண்ட கருத்துக்களைப் பரிமாறிக் கொண்ட னர்.

இந்தச் சந்திப்பில் இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் ரெடினோ மர்சூடி தலைமையிலான அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இலங்கை தரப்பில் இருந்து வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக் குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந் தலால் வீரசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.





## தீர்வு காண ரணிலுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

வீழ்ச்சியில் இருந்து தற்போது படிப்படியாக எழுச்சி பெற்று வருகின்றது. இது இன்னும் முழுமையாக முற்றுப்பெறாத நிலையிலேயே இருக்கின்றது. மக்களின் வாழ்க்கைச் சுமை முற்றுமுழுதாக குறைந்துவிட்டது என்று கூற முடியாது. எவ்வாறு இருந்தாலும் கடந்த காலங்களில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் போது மக்கள் எதிர்கொண்ட சிக்கல்கள் தற்பொழுது ஓரளவு குறைந்து கொண்டு வருகின்றன.

தொடர்ந்தும் இவ்வாறு மக்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்கள் நிவர்த்திக்கப்பட வேண்டும்.

இதற்கான முன்னெடுப்புகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகள் உட்பட அரசு மேற்கொள்கின்றது. இது தொடர்ச்சியாக சிறப்பான முறையில் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு நாங்கள் எல்லோரும் இணைந்து ஒத்துழைக்க வேண்டும். ஏனென்றால், நான் ஒரு வர்த்தக இராஜாங்க அமைச்சர் என்ற வகையில் நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இன்னும் குறைக்கப்பட வேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும். ஏனென்றால், அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பு என்பது இந்நாட்டில் வாழும் சாதாரண மக்களையே அதிகளவில் பாதிக்கின்றது.

எனவே, மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு அமைய இன்னும் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும். அது மிக முக்கியமான விடயமாகும். அத்தியாவசியப் பொருட்களை குறைந்த விலையில் மக்களுக்கு வழங்குவதற்கு அவசியமான நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

அதேநேரம், சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டிருந்தாலும் கூட இன்னும் ஒரு சில வர்த்தகர்கள் அதன் விலைகளை குறைத்ததாகத் தெரியவில்லை. எப்போது அவற்றை அதிகரித்தார்களோ, அதே விலையிலேயே தற்போதும் அப்பொருட்களை விற்பனை செய்யும் ஒரு துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது.

அதனால், இவ்வாறு விலை குறைக்கப்பட்ட பொருட்களை யார் அதிக விலையில் விற்கின்றார்களோ அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகளுக்கு நாம் பணிப்புரை விடுத்துள்ளோம்.

ஆகவே, இந்நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுகளைக் காண்பதன் மூலம் அத்தியவசியப் பொருட்களின் விலைகளைக் குறைத்து நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமையைக் குறைப்பதே இப்போது மிக முக்கியமான விடயமாக உள்ளது. இதற்கான பணிகளே தற்போது முன்னெடுக்கப்படுகின்றன.

மேலும், தற்போது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் ஜனாதிபதி, ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளில் இருக்கின்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் பேச்சு நடத்தி வருகின்றார்.

அரசமைப்பின் 13 ஆவது சீர்திருத்தம் மற்றும் அது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இதுபோன்ற கலந்துரையாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாமும் இவ்விடயம் குறித்து பல்வேறு கருத்துகளை முன்வைத்துள்ளோம். அவையும் மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கு அமைய நிறைவேற்றப்பட வேண்டும் எனக் கூறியுள்ளோம்.

நான் அமைச்சுப் பொறுப்பை ஏற்றதன் பின்னர் நாம் எதிர்நோக்கிய ஒரு பாரிய சவாலாக அமைந்தது கொவிட் தொற்றாகும். கொவிட் தொற்றிலிருந்து ஓரளவு நாங்கள் மீண்டு வருகின்ற போது, இரண்டாவதாக நாம் எதிர்நோக்கிய மிகப் பெரிய சவால் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியாகும். இதில் கிட்டத்தட்ட பதினாறு, பதினேழு மாதங்கள் கடந்துவிட்டன. ஆனாலும் இதிலிருந்து மீள்வதற்கு எமக்குக் கிடைத்த குறுகிய காலத்தில் இயன்றளவான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம். தற்போதும் முன்னெடுத்து வருகின்றோம்.

குறிப்பாக வீதி அபிவிருத்தி, பாலங்களை அமைத்தல், விவசாயத்துறை சார்ந்த விடயங்கள், மீன்பிடித் துறை சார்ந்த விடயங்கள், அதேபோன்று மக்களின் வாழ்வாதார மேம்பாடுகள் போன்ற பல்துறை சார்ந்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களை இயன்றளவு நாம் செயற்படுத்தி வருகின்றோம். ஆனால் அவை முழுமையானவை என்று கூற முடியாது. இருந்தாலும் இவ்வாறான சவால்களுக்கு மத்தியிலும் நாங்கள் மக்கள் நலன் சார்ந்த அபிவிருத்தி வேலைத்திட்டப் பணிகளை முன்னெடுத்து வருகின்றோம்.

மேலும், கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். அதேபோன்று முதன் முதலாக கிழக்கு மாகாணத்திற்கு ஒரு தமிழ் ஆளுனராக நியமிக்கப்பட்டுள்ளார். அதற்காக நாம் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும்.

தற்போதைய ஜனாதிபதி, தமிழ் மக்களின் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் உள்ளவர். அதில் அவர் கூடுதல் ஆர்வத்தையும் காட்டுகின்றார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் நெகிழ்வுத் தன்மையுடன் செயற்படக் கூடியவர். எனவே, நாம் அவருடன் கலந்துரையாடி எமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள எமது தமிழ்த் தலைவர்கள் முன்வரவேண்டும். அதேபோன்று தென்னிலங்கையில் இருக்கின்ற சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களுடனும் தமிழ்த் தலைவர்கள் கலந்துரையாட வேண்டும். எங்களுடைய பிரச்சினைகளையும் எங்களுடைய நீதியான, நியாயமான மற்றும் தரப்பட வேண்டிய விடயங்கள் குறித்தும் நாம் அவர்களுடன் கதைக்க வேண்டும். இதன்மூலம் அவர்கள் எமக்காக குரல் கொடுக்க வாய்ப்பு உள்ளது. இன்னும் அந்த இடத்துக்கு எமது விடயங்கள் போய்ச்சேரவில்லை.

நாம் ஒட்டுமொத்தமாக அனைவரையும் தவறாக நினைக்க முடியாது. இந்த விடயத்தில் நாம் சரியான முறையில் நமது நகர்த்தல்களை மேற்கொள்ளவில்லை என்றே நினைக்கின்றேன். அந்த நகர்த்தல்களை அதிவேகமாக நாம் முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும்." – என்றார்.

## விசேட தெரிவுக்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாடாளுமன்றத்தில் நேற்று உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் சனல் 4 அலைவரிசையில் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கான நாடாளுமன்ற விசேட தெரிவுக் குழுவை நியமிப்பதற்கான பிரேரணையை அரச தரப்பு எம்.பியான மேஜர் பிரதீப் உடுகொட முன்வைத்த நிலையிலேயே இவ்வாறு வலியுறுத்தப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. இது தொடர்பில் கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் மீண்டும் ஒரு தெரிவுக்குழுவை நியமிப்பது பயனற்றது. இது மக்களை ஏமாற்றும் முயற்சி. இதனூடாக சிறந்த விசாரணையை முன்னெடுக்க முடியாது. ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துங்கள். அத்துடன் சனல் 4 அலைவரிசையில் தெரிவிக்கப்பட்டிருக்கும் விடயங்கள் அனைத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையில் உறுதிப்படுத்தபட்டுள்ளது. அதனால் ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்றார்.

ஐக்கிய மக்கள் சக்தி எம்.பியான ராஜித சேனாரத்ன கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் ஏற்கனவே நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனைச் சட்டமூலமாக்கியது நாடாளுமன்றத்தில் இருக்கும் சிரேஷ்ட அதிகாரிகள். நாங்கள் அதனைச் செய்யவில்லை. அதனால் மீண்டும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து நாடாளுமன்றத்தை நகைப்புக்குட்படுத்தக்கூடாது. நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கு ஒரு மரியாதை இருக்கின்றது. அதனை இல்லாது செய்துவிடாதீர்கள்." – என்றார்.

சுயாதீன எதிரணி எம்.பயான அனுர பிரியதர்ஷன யாப்பா கூறுகையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலுடன் தொடர்புபடாதவர்களை ஈடுபடுத்தி விசாரணை நடத்தப்பட வேண்டும். புதிய குழுவொன்றை நியமிக்க வேண்டும். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கருத்துடன் உடன்படுகின்றேன். அவ்வாறு இல்லாமல் நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைத்து இந்த விடயத்தை மறைக்க முயற்சிக்காதீர்கள்." – என்றார்.

# தொழிலாளர்களுக்கு தீபாவளி கொடுப்பனவு 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும்

## பழனி திகாம்பரம் கோரிக்கை



பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான தீபாவளிக் கொடுப்பனவை 15,000 ரூபாவில் இருந்து 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க வேண்டும் என இலங்கை பெருந்தோட்ட நிறுவனங்கள் சம்மேளனத்திடம் தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையும் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், கொடுப்பனவை அதிகரிப்பதற்கான வழிவகைகள் தொடர்பில் ஆராய வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் வலியுறுத்தியுள்ளார்.

குறிப்பாக தானிய வகை, சீனி, எண்ணெய், மரக்கறி, மீன், கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளன. இந்த நிலையில், அதற்கான தீர்வாக இந்தக் கொடுப்பனவை இம்முறை அதிகரித்து வழங்க வேண்டும் என அந்த கடிதத்தினூடாக அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# இலங்கைப் பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கு ஹூவாவி நிறுவனத்துடன் சீனாவில் நேற்று உடன்படிக்கை

இலங்கை பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்குவதற்கான ஒத்துழைப்புகளை வழங்குவது தொடர்பில் ஹுவாவி நிறுவனத்துடன் பீஜிங்கில் நேற்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

சீனாவிற்கு சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பீஜிங் நகரிலுள்ள ஹுவாவி நிறுவனத்தின் ஆய்வு, அபிவிருத்திக்கான மத்திய நிலையத்திற்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொண்டபோதே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்த சுற்றுப்பயணத்தின் போது ஹுவாவி நிறுவனத்தின் பிரதித் தலைவர் ளுஅழெ டுலை-ஐ ஜனாதிபதி சந்தித்துள்ளார்.

இலங்கையில் மென்பொருள், வன்பொருள் பொறியியலாளர்களை வருடாந்தம் உருவாக்குவதற்கான கற்பித்தல் வேலைத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என ஹுவாவி நிறுவனத்தின் பிரதித் தலைவர் இதன்போது தெரிவித்துள்ளார்.

இலங்கையின் எதிர்காலம் தொடர்பில் கலந்தாலோசிக்கவே இம்முறை வருகை தந்திருப்பதாகவும், டிஜிட்டல் கல்வி முறைமை, பசுமை வலு சக்தி உற்பத்தி தொடர்பில் சீன அரசாங்கம், ஹுவாவி நிறுவனத்தின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.



சர்வதேச ஒத்துழைப்பிற்கான மூன்றாவது மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு சீனா சென்றுள்ளார்.

சர்வதேச ஒத்துழைப்பிற்கான மூன்றாவது மாநாடு சீனாவின் 'ஒரே மண்டலம் ஒரே பாதை' திட்டத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படுவதுடன், அரச தலைவர்களுக்கு இரவு நேர விருந்துபசாரம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

# எம்.பிக்கள் தமது மெய்ப்பாதுகாவலர்களுடன் தெரிவுக்குழு அறைக்குள் வர அனுமதியுங்கள்!

## பாதுகாப்புச் செயலரின் அச்சுறுத்தலை அடுத்து சபாநாயகரிடம் கோரிக்கை

பாதுகாப்பு செயலாளர் நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளும் போது எமது மெய்பாதுகாப்பாளர்கள் தெரிவுக்குழுவுக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்குங்கள். ஏனெனில் பாதுகாப்பு செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் நடந்துகொண்டார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார சபாநாயகரிடம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற அமர்வின் போது விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

பாதுகாப்புச் செயலாளர் நாடாளுமன்றத்துக்கு அடிக்கடி வருகை தருகிறார். நாடாளுமன்றத் தெரிவுக்குழு கூட்டத்தில் கலந்துக் கொள்கிறார்.

ஆகவே அவர் கலந்துக் கொள்ளும் தெரிவுக்குழு கூட்டத்தில் நாங்கள் பங்குபற்றும் போது எமது மெய்பாதுகாவலர்களை தெரிவுக்குழு அறைக்குள் உட்பிரவேசிக்க அனுமதி வழங்க வேண்டும், ஏனெனில் பாதுகாப்பு செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினருக்கு அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.



பாதுகாப்பு செயலாளரின் செயற்பாட்டினால் நாடாளுமன்ற உறுப்பினரது சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. ஆகவே இச்சம்பவம் தொடர்பில் உடன் விசாரணைகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகிறோம். – என்று தெரிவித்துள்ளார்.

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தெரிவுக்குழு ஏனைய விசாரணைகளில் தலையிடாது!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமித்தமை அதன் விசாரணைகளுக்கு இடையூறு ஏற்படுத் தாது என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு காரணமானவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதே நாடாளு மன்றத் தெரிவுக்குழுவை நியமிப்ப தன் நோக்கம் என அவர் வலியுறுத் தியுள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நிய மனம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன் வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கும் போதே, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

தெரிவுக் குழு மீது எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தன. மற்ற விசாரணைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இதைச் செய்ய வேண்டும் என்று எங்கும் கூறப்பட வில்லை.

கர்தினால் வழங்கிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதிய–ிடம் கையளித்தார். உண்மைகள் காரண மாக இந்த நாடாளுமன்றத்தின் தெரிவுக் குழுவோ அல்லது உறுப்பினர்களோ அந்த விசாரணையை மேற்கொள்ள முடியாது.

பாதுகாப்புப் படையினரும் அது தொடர்பான நிறுவனங்களும் இதனை நியமிப்பதுஅதற்குத்தடையாகஇருக்காது. அன்றைய தினம் நாடாளுமன்றத்தில் இது தொடர்பான விவாதம் இடம்பெற்ற தாக நான் நம்புகிறேன்.

முதலில் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவின் வளர்ச்சி குறித்து பேசினர். அதுபற்றி விவாதிக்க இந்த தேர்வுக் குழுவுக்கு வாய்ப்பு உள்ளது. இது ஒரு தடையாகவோ அல்லது விசாரணையா கவோ இருக்க நாங்கள் விரும்பவில்லை.

எனவே, நாங்கள் உங்கள் நிலைப் பாட்டில் இருந்து இதைப் பற்றி பேசுகி றோம். நாடாளுமன்றத் தெரிவுக்குழு நியமனத்தின் ஊடாக நாடாளுமன்றத் தில் முன்வைக்கப்பட்ட உண்மைகள் மற்றும் ஆவணங்களை முன்வைக்க முடியும் என நினைக்கின்றேன்.

ஏனெனில் அந்த விவாதத்தில் சில எம்.பி.க்கள் புதிய விஷயங்களை முன்வைத்த காலங்கள் உண்டு, நமக் குத் தெரியாத விஷயங்கள், ஒருவேளை அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடும். எனவே, தேர்வுக் குழு நியமனம் மூலம், மற்ற விசாரணைகள் தடைபடாது.

ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சமர்ப்பித்தார். அதுபற்றி நாட்டுக்கு வந்த பிறகு ஜனா திபதி பதில் அளிப்பார். உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் எமது அனைவரி னதும் நிலைப்பாடு இதனை செய்த வர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்ப தேயாகும். அந்த நடவடிக்கைகளுக்கு இது ஒரு தடையாக நான் நினைக்க வில்லை. – என்று தெரிவித்துள்ளார்.

# குருந்தூர்மலையில் திடீரென ஒன்றுகூடிய அரச அதிகாரிகள்



முல்லைத்தீவு – குருந்தூர்மலை பகுதிக்குப் புத்தசாசன அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட திணைக்கள உயர் அதிகா ரிகள் நேற்று திடீர் கள விஜயம் மேற்கொண்டார்கள்.

குருந்தூர்மலை விவகாரம் ஜனாதிபதி வரை பேசப்பட் டுள்ளது. இந்நிலையில், புத்தசாசன அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன, ஜனாதிபதி செயலக வடக்கு மாகாண இணைப்பாளர் எல்.இளங்கோவன் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் அ.உமாமகேஸ்வரன், மேலதிக அரச அதிபர்கள் மற்றும் பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்கள உயர் அதிகாரிகள், வனவள திணைக்கள உயர் அதிகாரிகள், வனஜீவராசிகள் திணைக்கள உயர் அதிகாரிகள், காணி தொடர்பான திணைக்கள உயர் அதி காரிகள், கமநலசேவை திணைக்கள உயர் அதிகாரிகள், விவசாய திணைக்கள உயர் அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் குருந்தூர்மலைப் பகுதிக்கு விஜயம் செய்து கள ஆய்வை மேற்கொண்டார்கள்.

கடந்த மாதம் இறுதியில் குருந்தி ராஜமஹா விகாரை அமைந்துள்ள தொல்பொருள் பகுதிக்குச் சொந்தமில்லாத காணியில் இருந்து 3 ஏக்கர் காணியை ஒதுக்குமாறு புத் தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளர் சோமரத்ன விதானபத்திரன இளைஞர் பாரம்பரியம் மற்றும் நவீன குடிமக்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு முன்மொழிந்திருந்தார்.

இதன் பின்னர் நேற்று மேற்படி உய அதிகாரிகள் குழுவினர் கள விஜயம் மேற்கொண்டு குருந்தூர்மலையைப் பார்வை யிட்டுள்ளதுடன் குருந்தூர்குளம் மற்றும் தொல்பொருள் திணைக்களத்தால் எல்லைப்படுத்தப்பட்ட பகுதிகளையும் பார்வையிட்டுள்ளனர்.

குருந்தூர்மலைக்காகத் தொல்பொருள் திணைக்க ளம் தமிழ் மக்களின் பூர்வீக காணிகளை எல்லைப்படுத்தி யுள்ளதாக விவசாயிகள் பல்வேறு தடவைகள் கோரிக்கை முன்வைத்துள்ளார்கள். மலையை அண்டிய தமிழ் மக் களின் பூர்வீகக் காணிகளில் எதுவும் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும், தொல்பொருள் திணைக்களமும் வனவளத் திணைக்களமும் தங்கள் காணிகளை எல்லைப் படுத்தியுள்ள நிலையில் மீள்குடியேற்றத்துக்குப் பின்னர் குறிப்பாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மக்கள் விவசாய செய்கையையோ மீள்குடியேற்றத்தையோ செய்ய முடியாத நிலையில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எம்.பிகளுக்கும் உயிர் அச்சுறுத்தல்

நாட்டில் நீதிபதிகளுக்கும் சரி, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் சரி, அரசாங்கத்தினால் மெய்ப்பாதுகாவலர்கள் வழங்கப்பட்டுள்ளனர். அப்படி இருந்தும், ஒரு நீதிபதி தமக்கு உயிர் அச்சுறுத்தல் என்று கூறி நாட்டையும், பதவியையும் விட்டு ஓடித் தப்பும் நிலைமை ஏற்பட்டிருப்பதைக் கண்டோம்.

அதே நிலைமை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வந்துவிடும் போல தெரிகிறது. நேற்று நாடாளுமன்றத்தில் ஆற்றப்பட்ட உரைகள் அந்நிலைமையை வெளிப்படுத்தி நிற்கின்றன.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மெய்ப்பாதுகாவலர்கள் வழங்கப்பட்டாலும், சபைக்குள் (நாடாளுமன்றத்துக்குள்) அவர்கள் பொதுவாக அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால் நாடாளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டம் நடைபெறும் அறைக்குள் தாங்கள் தங்கள் மெய்ப்பாதுகாவலர்களுடன் வர அனுமதிக்கப்பட வேண்டும், அவ்வளவு தூரம் தங்களுக்கு அச்சுறுத்தல் உள்ளது என்று எம்.பிக்களே நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக சபாநாயகரிடம் முறையிட்டுக் கோரும் அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது.

இந்த அச்சுறுத்தல் விடயத்தில் இரண்டு விடயங்கள் அவதானிக்கப்பட வேண்டும்.

ஒன்று - அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட இடம். நாடாளுமன்ற கட்டடத் தொகுதி. ஜனநாயகத்தின் மூலஸ்தானம் - கருவறை - என்று கூறப்படும் இடம் வரை அச்சுறுத்தல் நேரடியாக வந்துவிட்டது.

அடுத்தது - அந்த அச்சுறுத்தலை விடுத்தவர் என்று குற்றம் சுமத்தப்படுபவர். நாட்டில் எம்.பிக்கள், நீதிபதிகள் உட்பட அனைத்துத் தரப்பினருக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பில் உள்ள பாதுகாப்புச் செயலாளரிடமிருந்தே இந்த அச்சுறுத்தல் வந்திருக்கிறது.

பாதுகாப்புத்துறை தொடர்பான தெரிவுக் குழு கூட்டம் ஒன்றில் வைத்து பாதுகாப்புச் செயலாளர் தம்மை அச்சுறுத்தினார் என்று நேற்று நாடாளுமன்றத்தில் உறுப்பினர் சந்திம வீரக்கொடி சுட்டிக்காட்டினார்.

"நாட்டு மக்களின் வரிப்பணம் மோசடி செய்யப்படுவது தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கலந்து கொண்ட துறைசார் மேற்பார்வைக் குழுவில் ஒருசில விடயங்களைக் குறிப்பிட்டேன். அதனை தொடர்ந்து தெரிவுக்குழுவில் வைத்து எனக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதனால் எனது நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளது. பாதுகாப்புச் செயலாளர் அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் குறிப்பிட்ட கருத்துக்கள் அடங்கிய அந்தக் குரல் பதிவை வெளியிடுமாறு தொடர்ந்து வலியுறுத்துகிறேன்."- என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது மிக மோசமான நிலைமை. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவி என்பது ஒரு சிவில் நிர்வாக அதிகாரிக்குரிய நியமன இடம். திரும்பவும் இராணுவ அதிகாரி ஒருவரை அப்பதவிக்கு நியமித்து நாட்டையும், அரசையும், ஆட்சித் துறையையும் இராணுவமயப்படுத்தி இருக்கிறார்கள். அதன் விளைவு தான் இது...!

# அடுத்த தேர்தலில் சஜித்துக்கும் அநுரவுக்கும்தான் கடும் போட்டி

## ராஜித எம்.பி. தெரிவிப்பு



"அடுத்த தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்திக்கும், அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் தான் கடும் போட்டி காணப்படும்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

"ஐக்கிய மக்கள் சக்திக்குதான் மக்கள் மத்தியில் சிறந்த கேள்வி உள்ளது, அடுத்த இடத்தில் ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தி இருக்கின்றது, ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்பன பட்டியலில் இல்லை. ஆக இருமுனைப் போட்டிதான் காணப்படும்.

அதேவேளை, சுகாதார அமைச்சை மீள கட்டியெழுப்ப முடியும். சிறந்த அரசியல் வேலைத்திட்டமொன்று இருந்தால் சுகாதார அமைச்சை மட்டுமல்ல எல்லாத் துறைகளையும் கட்டியெழுப்பலாம்." – என்றார்.

# ரணில் - பாகிஸ்தான் பிரதமர் சந்திப்பு



"ஒரே பட்டி – ஒரே பாதை" சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாகிஸ்தான் பிரதமர் அன்வர் – உல் – ஹக்ககாருக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று பிற்பகல் நடைபெற்றது.

இன, மத மற்றும் வர்க்க வேறுபாட்டு பிரச்சினைகளுடன் ஒவ்வொருக்கும் இடையிலான வெறுப்புகள், குரோதங்களைத் தவிர்த்து மனிதாபிமானம் நிறைந்த சமூதாயத்தை கட்டியெழுப்பும் சவாலுக்கு முழு உலகும் முகம்கொடுத்துள்ளமை தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் கலந்தாலோசித்தனர்.

இதன்போது, பாகிஸ்தான் மற்றும் இலங்கை முகம்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பாகிஸ்தான் பிரதமரும் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

காஸா எல்லைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மோதல்கள் தொடர்பில் இரு நாட்டுத் தலைவர்களும் கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டதோடு, அது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிடவும் இரு தலைவர்களும் இணக்கம் தெரிவித்தனர்.

பாகிஸ்தான் நிதி அமைச்சர் சம்ஷாட் அக்தார் உள்ளிட்ட தூதுக்குழுவினரும், இலங்கையின் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட குழுவினரும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# சிவகாசி பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட வெடி விபத்துக்களில் சிக்கி 14 பேர் பலி!



சிவகாசி அருகே வெவ்வேறு இடங்களில் உள்ள இரு பட்டாசு ஆலைகளில் ஏற்பட்ட வெடி விபத்துக்களில் சிக்கி 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன், உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 3 லட்சம் ரூபா நிதியுதவியை முதல்வர் ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சிவகாசி அருகே புதுப்பட்டி பொலிஸ் நிலையத்துக்கு உட்பட ரெங்கபாளையம் கம்மாபட்டி பகுதியில் பட்டாசு ஆலை ஒன்றும் அதனுடன் பட்டாசு விற்பனை கடையும் உள்ளது.

இந்த ஆலையில் 50 இற்கும் மேற்பட்டோர் பணிபுரிந்து வந்தனர். பட்டாசு ஆலையில் பணிபுரிந்த சுமார் 15 தொழிலாளர்கள் பட்டாசு கடையில் அமர்ந்து மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

இந்த ஆலையில் நேற்று மதியம் உணவு இடைவேலையின்போது, உற்பத்தி செய்யப்பட்ட பட்டாசுகளை வெடித்து சோதனை செய்து பார்த்து உள்ளனர். அப்போது அருகே இருந்த பட்டாசு விற்பனை கடையில் தீப்பொறி பட்டு வெடி விபத்து ஏற்பட்டது.

இதில் பட்டாசு கடையில் மதிய உணவு சாப்பிட்டு கொண்டு இருந்த 9 பேர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

காயமடைந்தவர்களை மீட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டனர். காயமடைந்த வர்களில் மேலும் நால்வர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 13 ஆக அதிகரித்தது. இதனிடையே, சிவகாசிக்கு அருகே மாரனேரி கீச்சநாயக்கன்பட்டியில் பட்டாசு ஆலையில் சக்கரம் ரக பட்டாசு உற்பத்திக்காக மருந்து கலவை செய்தபோது ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி ஒருவர் உடல் கருகி உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில், பட்டாசு ஆலை விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில், விருதுநகர் மாவட்டம், சிவகாசி அருகேயுள்ள மாரனேரி கிராமம், கிச்சநாயக்கன்பட்டி மற்றும் சிவகாசி அருகேயுள்ள, மங்களம் கிராமம் ஆகிய இரு வேறு இடங்களில் இயங்கி வந்த தனியாருக்குச் சொந்தமான பட்டாசு ஆலைகளில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தோர் குறித்த துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வேதனை அடைந்தேன்.

மேலும், இந்த விபத்தில் படுகாயமடைந்து ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள இரண்டு நபர்களுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்கவும் அறிவுறுத்தியுள்ளேன்.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அத்துடன், அவர்களது குடும்பத்தினருக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், படுகாயமடைந்தவர்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாயும், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளார்.

# நேபாள கடவுச்சீட்டை பயன்படுத்தி சீன உளவாளிகள் இந்தியாவிற்குள் நுழைகின்றனர் என எச்சரிக்கை

நேபாளம் ஊடாக சீன உளவாளிகள் இந்தியாவிற்குள் நுழைகின்றனர் என இந்தியாவின் முன்னணி உளவு அமைப்பான ஆர்.ஏ.டபிள்யூ எச்சரிக்கை விடுத்துள்ளது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான தகவல்களை வெளியிடும் இந்திய இணையத்தளம் இது தொடர்பில் செய்தி வெளியிட்டுள்ளது.

சமீபத்திய விசாரணைகளில் வெளிக்கொணரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில், இந்தியாவின் பாதுகாப்புடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு ஆர்.ஏ.டபிள்யூ அமைப்பு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.




நேபாள கடவுச்சீட்டை பயன்படுத்தி சீன உளவாளிகள் இந்தியாவின் புனே, மும்பை, நாக்பூர் உள்ளிட்ட நகரங்களுக்குள் ஊடுருவியுள்ளதாகவும் குறித்த சீன உளவாளிகள் சாமானியர்களைப் போன்று செயற்படுகின்றனர் என ஆர்.ஏ.டபிள்யூ அமைப்பு கண்டுபிடித்துள்ளது.

ஹிந்தி, ஆங்கில மொழியை சரளமாக பேசும் திறமை கொண்ட சிறந்த பயிற்சிகளைப் பெற்றுள்ள குறித்த சீன உளவாளிகளை பிரித்தறிய முடியாதுள்ளது என அந்த வமைப்பு தெரிவித்துள்ளது.

சீன உளவாளிகளின் நோக்கம் உளவுத் தகவல்களை சேகரிப்பது அல்லவெனவும் பொருளாதார நெருக்கடி நிலைமையைத் தோற்றுவித்து, இந்திய கொள்கை வகுப்பில் தாக்கம் செலுத்துவதே அவர்களின் நோக்கம் என்றும் ஆர்.ஏ.டபிள்யூ குறிப்பிட்டுள்ளது.

# ஹமாஸ் அழிக்கப்படும் வரை இஸ்ரேல் ஓயாது: புடினுடனான உரையாடலில் நேதன்யாகு உறுதி



ஹமாஸ் அமைப்பின் இராணுவ மற்றும் அரசு நிர்வாகத் திறனை அழித்தொழிக்கும் வரை போர் தொடரும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுடனான தொலைபேசி உரையாடலின்போது இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு உறுதியாக தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலுக்கு எதிராக கடந்த 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் தாக்குதலை தொடங்கினர். இதில், இஸ்ரேல் தரப்பில் 1,400 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இஸ்ரேல் நடத்தி வரும் பதில் தாக்குதலில் 2 ஆயிரத்துக்கும் 800 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் தாக்குதல் தீவிரமடைந்து வரும் நிலையில், மனிதாபிமான அடிப்படையில் அங்கு போர் நிறுத்தத்தை ஏற்படுத்த வேண்டும் என்று கோரி ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு அவையில் ரஷ்யா தீர்மானம் கொண்டு வந்தது.

எனினும், அந்த தீர்மானத்தில் ஹமாஸ் அமைப்பின் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவிக்கப்படாததை சுட்டிக்காட்டி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. இதையடுத்து அந்த தீர்மானம் தோல்வி அடைந்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் தொலைபேசியில் உரையாடி உள்ளார்.

இதனை இஸ்ரேல் பிரதமர் அலுவலகம் தனது சமூகவலைத்தள பக்கத்தில் தெரிவித்துள்ளது. 'கொடூர கொலைகாரர்களால் இஸ்ரேல் தாக்கப்பட்டுள்ளது. இதற்குக் காரணமான ஹமாஸ் பயங்கரவாத அமைப்பின் இராணுவ மற்றும் ஆட்சி நிர்வாக திறனை அழித்தொழிக்கும் வரை தாக்குதல் தொடரும். இதில், இஸ்ரேல் ஒன்றுபட்டு உறுதியாக உள்ளது. ஹமாஸ் அமைப்பினரை அழித்தொழிக்கும் வரை இஸ்ரேலிய இராணுவம் ஓயாது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், நேதன்யாகு உடன் தொலைபேசியில் உரையாடியதை உறுதிப்படுத்தி உள்ள ரஷ்ய வெளிவிவகாரஅமைச்சகம், இஸ்ரேல் – காசா இடையே வன்முறை மேலும் தீவிரம் அடையாமல் இருக்க ரஷ்யா எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விவரித்தார். இரு தரப்புக்கும் இடையேயான இந்தத் தாக்குதலால் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து ஜனாதிபதி புடின் எடுத்துரைத்தார்.

இந்த உரையாடலின்போது, இஸ்ரேலிய பிரதமர் நேதன்யாகு, எகிப்து, ஈரான், சிரியா, பாலஸ்தீன தலைவர்களுடன் நடத்திய உரையாடலின் முக்கிய தகவல் களை தெரிவிப்பதில் மிகவும் குறிப்பாக இருந்தார். அப்போது, இஸ்ரேலில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கும் நண்பர்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலை புடின் தெரிவித்தார்.

மேலும், தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் நிகழாமல் தடுக்கப்படுவதன் அவசியத்தையும், மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் வலியுறுத்தினார்.

இந்த பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண இரு தரப்பும் அரசியல் மற்றும் தூதரக ரீதியில் செயல்பட வேண்டும் என்பதையும் ஜனா திபதி விளாடிமிர் புடின் விளக்கினார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, காசா மீது தரை வழித் தாக்குதலுக்காக இஸ்ரேல் தனது படையை எல்லையில் தயார் நிலையில் வைத்துள்ளது. ஹமாஸ் அமைப்பை அழித்தொழிப்பதற்கான திட்டத்திற்கு இஸ்ரேல் அமைச்சரவை ஒப்புதல் வழங்கி உள்ளது. இதனால், காசா – இஸ்ரேல் எல்லையில் பதற்றம் அதிகரித்துள்ளது.

# இஸ்ரேல், ஹமாஸ் போரை நிறுத்தவேண்டும்: ரஷ்யா முன்வைத்த பிரேரணை நிராகரிப்பு

இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினர் இடையிலான போர் 11 ஆவது நாளை கடந்து தொடர்கிறது.

இதற்கிடையே, போர் நிறுத்தம், பணயக்கைதிகளை விடுவிக்க வேண்டும், பொதுமக்களை பாதுகாப்பாக வெளியேற்ற வேண்டும் எனும் பிரேரணையை ஐ.நா. பாதுகாப்பு அவையில் ரஷ்யா கொண்டு வந்தது.

இந்த நிலையில், இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனம் இடையிலான போர் நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்த ரஷ்யாவின் வரைவு பிரேரணையை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு அவை நிராகரித்துள்ளது.

ஐ.நா பாதுகாப்பு அவையில் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் உட்பட மொத்தம் 15 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளனர். இங்கு கொண்டுவரப்படும் ஒரு தீர்மானம் நிறைவேற 9 நாடுகளின் ஆதரவு தேவை. இந்த நிலையில், இஸ்ரேல் – ஹமாஸ் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி ரஷ்யா கொண்டு வந்த பிரேரணை தோற்கடிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் பிரேரணைக்கு ஆதரவாக சீனா, கபோன், மொசாம்பிக், ரஷ்யா, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 5 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. எதிராக இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான் ஆகிய 4 நாடுகள் வாக்களித்தன. அல்பேனியா, பிரேசில், ஈக்வடார், கானா, மால்டா, ஸ்விட்சர்லாந்து ஆகிய 6 நாடுகள் வாக்கெடுப்பை புறக்கணித்தன. இதனால், இந்த பிரேரணை தோல்வி அடைந்தது. இந்த தீர்மானத்தின் மீது உரையாற்றிய ஐ.நாவுக்கான அமெரிக்க தூதர் லிண்டா தாமஸ், இஸ்ரேல் மீது ஹமாஸ் நடத்திய தாக்குதல் தொடர்பாக ரஷ்ய பிரேரணையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

எனவே, இதனை ஆதரிக்க முடியாது. ஹமாஸ் அமைப்பின் செயலை கண்டிக்காததன் மூலம் அத்தகைய அமைப்புகளுக்கு ஆதரவாக ரஷ்யா உள்ளது. ஹமாஸ் அமைப்பு அப்பாவி மக்களை கொன்றுள்ளது, கடத்திச் சென்றுள்ளது. இதில், அமெரிக்கக் குடும்பங்களும் உள்ளன. காஸா மக்கள் தற்போது சந்தித்து வரும் துயரங்களுக்குக் காரணம் ஹமாஸ்தான் என்று குறிப்பிட்டுள்ளார்.



# தர்மசாலாவில் வைத்து தெ.ஆபிரிக்காவை

# போட்டுத் தள்ளியது நெதர்லாந்து!

தென்னாபிரிக்காவுக்கு எதிரான உலகக் கிண்ண லீக் ஆட்டமொன்றில் நெதர்லாந்து அணி வெற்றிபெற்று அசத்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டம் ஒன்றில் தென்னாபிரிக்கா – நெதர்லாந்து அணிகள் தர்மசாலாவில் மோதின.

மழை காரணமாக தாமதமாகத் தொடங்கிய ஆட்டம் 43 ஓவர்களாகக் குறைக்கப்பட்டது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்கா அணி, முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதையடுத்து நெதர்லாந்து அணியின் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கிய விக்ரம்ஜித் சிங் (2), மேக்ஸ் ஓடவுட் (18) விரைவாகவே ஆட்டமிழந்தனர்.

பின்னம் களமிறங்கிய அக்கெர்மென் (12), பாஸ் டீ லீட் (2), ஏங்கல்பிரெக்ட் (19), நிதாமனுரு (20), வான் பீக் (10) ஆகியோர் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து ஸ்கொட் எட்வர்ட்ஸ் மற்றும் வான் டர் மெர்வ் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர். வான் டர் மெர்வ் 29 ஓட்டங்கள் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய எட்வர்ட்ஸ் அரைச்சதம் (78) அடித்து அசத்தினார்.

இறுதியில் நெதர்லாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 43 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 245 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 246 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்கா, பவுமா (16), டிகொக் (20), வென் டர் டெசன் (4), மார்க்ரம் (1) ஆகியோரை வரிசையாகப் பறிகொடுத்தது.

இதனால், 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தென்னாபிரிக்கா தடுமாறியது.

இதையடுத்து மில்லர் மற்றும் க்ளாசென் இணைந்து அணியை சரிவிலிருந்து மீட்டனர். அணியின் ஓட்ட எண்ணிக்கை 89 ஆக உயர்ந்தபோது இந்த இணை பிரிந்தது. நிதானமாக ஆடிய க்ளாசென் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். சிறிது நேரத்தில் மில்லரும் (43) ஆட்டமிழந்தார். இதனால், தென்னாபிரிக்காவின் கடைசி நம்பிக்கையும் முடிவுக்கு வந்தது.

இறுதியில் தென்னாபிரிக்கா அணி 42.5 ஓவர்களில் 207 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்மூலம் நெதர்லாந்து அணி, பலம் வாய்ந்த தென்னாபிரிக்கா அணியை 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி, உலகக் கிண்ணத் தொடரில் தனது முதல் வெற்றியைப் பதிவுசெய்துள்ளது.

நெதர்லாந்து அணி சார்பாக அதிகபட்சமாக வான் பீக் 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

ஆட்டநாயகனாக நெதர்லாந்தின் எட்வர்ட்ஸ் தெரிவானார்.

இந்த வெற்றிமூலம் இரண்டு புள்ளிகளைப் பெற்ற நெதர்லாந்து அணி, புள்ளிப்பட்டியலில் பத்தாவது இடத்திலிருந்து ஒன்பதாவது இடத்துக்கு முன்னேறியது.

ஒன்பதாவது இடத்திலிருந்த இலங்கை அணி பத்தாவது இடத்துக்குத் தள்ளப்பட்டது.

இந்தப் போட்டியில் தோற்றாலும் தென்னாபிரிக்கா அணி மூன்றாவது இடத்தைத் தக்கவைத்துள்ளது.

### உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2023 - புள்ளி அட்டவணை

| | அணிகள் | போ | வெ | தோ | சமன் | மு.அ | பு | ஓ.ச |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | இந்தியா | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.821 |
| 02 | நியூஸிலாந்து | 3 | 3 | 0 | 0 | 0 | 6 | 1.604 |
| 03 | தென்னாபிரிக்கா | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 1.385 |
| 04 | பாகிஸ்தான் | 3 | 2 | 1 | 0 | 0 | 4 | 0.137 |
| 05 | இங்கிலாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.084 |
| 06 | ஆப்கானிஸ்தான் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.652 |
| 07 | பங்களாதேஷ் | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.699 |
| 08 | அவுஸ்திரேலியா | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.734 |
| 09 | நெதர்லாந்து | 3 | 1 | 2 | 0 | 0 | 2 | -0.993 |
| 10 | இலங்கை | 3 | 0 | 3 | 0 | 0 | 0 | -1.532 |

குறிப்பு: போ-போட்டி, வெ-வெற்றி, தோ-தோல்வி, மு.அ.-முடிவு அற்றது, பு-புள்ளி, ஓ.ச.-ஓட்ட சராசரி

# தனுஷ்க குணதிலக்க மீதான போட்டித் தடையை நீக்குவதற்கு சுயாதீன விசாரணைக்குழு பரிந்துரை



இலங்கை கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க மீது விதிக்கப்பட்டிருந்த போட்டித் தடையை முழுமையாக நீக்குவதற்கு சுயாதீன விசாரணைக் குழு பரிந்துரை செய்துள்ளது.

தனுஷ்க குணதிலக்க ஆஸ்திரேலியாவில் பெண்ணொருவரைப் பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் எனக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில், அது தொடர்பில் ஆராய்வதற்காக இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தினால் மூவரடங்கிய சுயாதீன விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது.

இதன் பின்னர் அனைத்து வகையான கிரிக்கெட் போட்டிகளிலும் பங்கேற்க அவருக்கு தடை விதிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியாவின் நியூ சவுத்வேல்ஸிலுள்ள டவுனிங் சென்டர் பிராந்திய நீதிமன்றம் தனுஷ்க குணதிலக்க குற்றமற்றவர் என அண்மையில் தீர்ப்பளித்தது.

அதற்கமைய தனுஷ்க குணதிலக்க மீது விதிக்கப்பட்டிருந்த போட்டித் தடையை முழுமையாக நீக்குவதற்கு சுயாதீன விசாரணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் நிறைவேற்றுக் குழு கடந்த 13 ஆம் திகதி கூடி, சுயாதீனக் குழுவின் தீர்மானத்தை ஏகமனதாக அங்கீகரித்துள்ளது.

# வருத்தப்படாத வாலிபர் சங்க கரப்பந்தாட்டத் தொடர்: சம்பியனானது ஆவரங்கால் இந்து இளைஞர்



இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் நடத்திய கரப்பந்தாட்டத் தொடரின் சம்பியனாக ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் முடிசூடியுள்ளது.

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கம் அமரர் சிவகுருநாதன் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் கரப்பந்தாட்டத் தொடர் நடத்திவருகின்றது. அதன்படி இந்த ஆண்டுக்கான தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் (16) இரவு, இளவாலை வாலிபத் திடலில் நடைபெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் சென்றல் ஸ்டார் விளையாட்டுக் கழகம் மோதியது.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் 3:0 என்ற சுற்றுக் கணக்கில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி வெற்றிபெற்று சம்பியனானது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் கலந்துகொண்டார். சிறப்பு அதிதிகளாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் ஆசிரியர் டனிவோல்டர் மற்றும் பிரபல தொழிலதிபர் (உரிமையாளர் அருள் Construction) றெமினஸ் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



# குடிசன வீட்டு வசதிகள் மதிப்பீடு; வவுனியாவில் நேற்றுத் தொடக்கம்





குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டு நடவடிக்கைகள் வவுனியாவில் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வவுனியா பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட வைரவபுளியங்குளம் கிராம அலுவலர் பிரிவில் இச்செயற்பாடானது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இலங்கையின் 15 ஆவது குடிசன வீட்டு வசதிகள் தொகை மதிப்பீட்டின் இரண்டாம் கட்டமான கட்டடங்களை நிரல்படுத்தும் செயற்திட்டம் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக் கப்பட்டு வருகின்றது.

இச்செயற்பாடுகளிற்காக மாவட்ட செயலா ளரின் வழிகாட்டலில் நிரல்படுத்தும் உத்தி யோகத்தர்களாக கிராம சேவையாளர்கள் மற்றும் ஏனைய வெளிக்கள உத்தியோ கத்தர்கள் நியமிக்கப்பட்டு, ஒவ்வொரு கட்டடங்கள் மற்றும் வீடுகளிற்கு சென்று அக்கட்டடங்கள் அங்கு வசிக்கும் நபர்கள் தொடர்பான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

அதற்கமைவாக, வவுனியா பிரதேச செய லகபிரிவுக்குட்பட்டவைரவபுளியங்குளம்கிராம அலுவலர் பிரிவில் இச்செயற்பாடானது முன்னெடுக்கப்பட்டது.










# மக்களின் காணிகளைச் சட்டவிரோதமாகச் சுவீகரித்து கட்டிய ஜனாதிபதி மாளிகை பின்கதவால் குத்தகைக்கு!

## சீறுகின்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் உமாச்சந்திர பிரகாஷ்

-எஸ்.நிதர்ஷன்-




யாழ்ப்பாணம் கீரிமலையில் அமைக் கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை எவ்வாறு தனியாருக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பியுள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளர் உமாச்சந் திர பிரகாஷ் பாதிக்கப்பட்ட மக்களுடன் இணைந்து இதற்கு எதிராகத் தாம் போராடப் போகிறார் எனவும் தெரிவித் தார்.

யாழ் ஊடக அமையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறுஅவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 33 வருடங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயமாகக் காணப் படும் பிரதேசத்திற்குள் அமைக்கப் பட்டுள்ள ஜனாதிபதி மாளிகை தற்போது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு 50 வருட காலப் பகுதிக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் வாழ்ந்த மக்கள் 33 வருடங்களுக்கு மேலாக இடம்பெயர்ந்து தற்காலிக இடங்களில் வசித்து வரும் நிலையில், தம்மை மீள்குடியேற்றுமாறு வலியுறுத்திப் போராட்டங்களை நடத்தி, பல்வேறு தரப்பிடமும் கோரிக்கையும் விடுத்து வருகின்றனர்.

அவர்களை மீள்குடியேற்றாமல், அவர்களின் காணிகளை சட்டவிரோத மாக சுவீகரித்து, அங்கு அமைக்கப் பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையை தனியார் நிறுவனத்திற்கு குத்தகைக்கு விடுத்துள்ளனர்.

முதலீட்டாளர்கள் வடமாகாணத்தை நோக்கி வருவதை வரவேற்கிறோம். சட்ட ரீதியாக எமது மக்களைப் பாதிக்காத வகையில் அவர்களின் முதலீடுகள் அமைய வேண்டும்.

ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள சுமார் 12 ஏக்கர் காணியை எடுத்துக் கொண்டு, அதற்குள் இருக்கும் தனியார் காணிகளுக்கான இழப்பீடுகளை தற்போதைய சந்தை பெறுமதியின் அடிப்படையில் வழங்க வேண்டும்.

அதேவேளை ஜனாதிபதி மாளி கையை சூழவுள்ள சுமார் 18 ஏக்கர் காணி யையும் உடனடியாக காணி உரிமை யாளர்களுக்கு கையளிக்க வேண்டும்.

அத்துடன், ஜனாதிபதி மாளிகையை சூழவுள்ள பகுதிகளில் தொன்மையான ஆலயங்களான ஆதி சிவன் ஆலயம், விஷ்ணு ஆலயம், சடையம்மா மடம் உள்ளிட்ட மடாலயங்கள் என்பவை விடுவிக்கப்பட வேண்டும்.

அதேவேளை இந்த ஜனாதிபதி மாளிகையை தங்குமிட விடுதிக்கு தருமாறு புலம்பெயர் தமிழர்கள் தமக்கு வழங்குமாறு கோரிய போதிலும், ஒரே ஒரு தமிழர் மட்டும் இருக்கும், அந்நிறு வனத்திற்கு வழங்கியுள்ளனர்.

இந்த ஜனாதிபதி மாளிகை என்ன அடிப்படையில், இப்படி குத்தகைக்கு வழங்கப்பட்டது என்பதை மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். - என்றார்.



# பத்து வீத தொழுநோயாளர்கள் 14 வயதிற்குட்பட்ட சிறுவர்கள்

நாட்டில் தொழுநோயாளர்களில் 10 வீதமானோர் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் என சுகாதார அமைச்சின் தொழுநோய் தடுப்புப் பிரிவு தெரி வித்துள்ளது.

சிறந்த முறையில் தொழுநோயைக் கட்டுப்படுத்தும் நாடொன்றில், சிறுவர் தொழுநோயாளர்களின் எண்ணிக்கை 4 வீதத்திற்கும் குறைவாகக் காணப்பட வேண்டும் என அந்த பிரிவின் விசேட வைத்திய நிபுணர் பிரசாத் ரணவீர குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஆண்டின் முதல் 9 மாதங்க ளில் 1155 தொழுநோயாளர்கள் நாட் டில் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.

இதில் 10வீதமான தொழுநோயாளி கள் 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளாக உள்ளனர்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் புதிய முயற்சிகள் அவசியம் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



# இஸ்ரேலில் இலங்கைப் பெண் உயிரிழந்தமை உறுதியானது

ஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலின் பின்னர் காணாமல் போயிருந்த இலங்கையைச் சேர்ந்த பெண் உயிரிழந்துள்ளார் என அந்நாட்டு பொலிஸார் நேற்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

களனி ஈரியவெடிய பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட அனுலா ரத்நாயக்க (ஜயதிலக்க) என்பவரே தாக்குதலின் போது உயிரிழந்துள்ளார் என இஸ்ரேல் பொலிஸார் நேற்று உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்நிலையில், உயிரிழந்த பெண்ணின் சடலம் இரண்டு நாள்களுக்குள் இலங்கைத் தூதரகத்திடம் ஒப்படைக்கப் படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# லெபனானில் பணிபுரிகின்ற இலங்கையருக்கு அறிவித்தல்

லெபனானில் பணிப்புரியும் இலங்கையர்களின் பெயர் விவரங்கள் மற்றும் தொலைபேசி இலக்கங்களை உடன் வழங்குமாறு பெய்ரூட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் அவசர அறிவிப்பு ஒன்றை விடுத்துள்ளது.

குறிப்பாக தெற்கு லெபனானில் பணிப்புரியும் இலங்கையர்களின் பெயர் விவரங்களை உடனடியாக வழங்குமாறு தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

இதற்காக விசேட வட்ஸ்அப் இலக்கம் மற்றும் மின்னஞ்சல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, 070386754, 071960810 என்ற வட்ஸ்அப் இலக்கம் அல்லது slemb.beirut@mfa.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு விவரங்களை உடனடியாக அனுப்பி வைக்குமாறு தூதரகம் வலியுறுத்தியுள்ளது.

# ஜோர்தான் - இஸ்ரேல் எல்லையில் இரு இலங்கைப் பெண்கள் கடத்தல்

## இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் தகவல்



ஜோர்தான் – இஸ்ரேல் எல்லைப் பகுதியில் இலங்கை பெண்கள் இருவர் கடத்தப்பட்டுள்ளனர் என இஸ்ரேலுக்கான இலங்கை தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

அந்த இருவர் பற்றிய தகவல்கள் தேடப்பட்டு வருகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் – பலஸ்தீன மோதல் காரணமாக காணாமல் போன 2 இலங்கையர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித தகவலும் கிடைக்கவில்லை என நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

இதேவேளை, காசாவில் வசிக்கும் இலங்கையர்களை எகிப்தின் ஊடாக இலங்கைக்கு அழைத்துவருவது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு, எகிப்து தூதரகத்துடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றது.



# மன்னார் தீவுக்குள் காற்றாலைகள் அமைத்து மக்களின் வாழ்வியல் நிலையைக் குழப்பாதீர்!

## மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சிவகரன் வலியுறுத்து

(மன்னார் நிருபர்)

மன்னாரை மையப்படுத்தி இங்கு வாழ்கின்ற மக்களுடைய அடிப்படை வாழ்வாதார, வாழ்வியல் நிலைப்பாட்டை குழப்புகின்ற நிலைப்பாடு தோற்றுவிக்கப் படுகிறது. எனவே இவற்றை செயற்பாடு களை முற்றாக எதிர்க்கின்றோம் என மன்னார் மாவட்ட பொது அமைப்புக் களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ். சிவகரன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப் பட்டுவரும் காற்றாலை அபிவிருத்தி பணிகள் குறித்து மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று செவ்வாய்க்கிழமை பகல் மன்னாரில் விசேட ஊடகச் சந்திப்பு இடம் பெற்றது.

அந்த ஊடகச் சந்திப்பில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன், மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் வாழ்வுதய இயக்கு நர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிக ளார், மன்னார் பிரஜைகள் குழு உறுப் பினர் பத்திநாதன் குரூஸ் ஆகியோர் இணைந்து கருத்துக்களை முன் வைத் தனர்.

இதன்போது மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் வி.எஸ்.சிவகரன் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மன்னார்மாவட்டத்தில்143காற்றாலை கள் மூலம் 500 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அதன் பணிகள் இடம்பெற்று வருகின்றன. ஏற்கனவே மன்னார் மின்சார சபையின் ஏற்பாட்டில் 30 காற்றாலைகள் இயங்குகின்றன

3.45 மெகா வோல்ட் இல் 102.5 மெகா வோல்ட் மின்சாரம் தற்போது உற்பத்தியாகி வருகின்றது. அதன் 2 ஆவது கட்டம் 21 காற்றாலைகள் அமைப்பதற்கான பணிகள் இடம்பெற்று வருகின்றன. அதிலும் 3.45 தொடக்கம் 53.45 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய அளவிற்கும் அதே போல் முசலி – சிலாபத்துறை யில் இருந்து முள்ளிக்குளம் வரை 34 காற்றாலைகள் அமைக்க உள்ளனர்.

அதில் 100 மொக வோல்ட் மின்சாரம் மொத்தமாக மின்சார சபைக்கு 250.45 மெகா வோல்ட் மின்சாரம் உற்பத்தி செய்யக்கூடிய வகையில் அதனுடைய பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

30 காற்றாலையில் இருந்து மின் உற்பத்திகள் இடம் பெற்று வருகின்றன. தனியாருடைய மன்னார் நருவிலிக்குளத் தில் 06 காற்றாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. 2. 45 மெகா வோல்ட் இல் 15 மெகா வோல்ட் மின்சாரம் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது.

அதற்கு அப்பால் இந்தியாவினுடைய அனுசரணையில் அதானியினுடைய கம்பனியால் 52 காற்றாலைகள் நிறு வப்பட உள்ளன.

தென்னாசியாவில் ஆகப் பெரிய அளவில் மின் உற்பத்தியை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் தலா 5.5 மெகா வோல்ட் மின்சாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய அளவில் ஏறக்குறைய 250 மெகா வோல்ட் மின்சாரத்தை உற் பத்திசெய்யக்கூடியஅளவில்52இடங்கள் அடையாளம் காணப்பட்டு அதனு டைய ஆரம்ப பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மன்னார் மாவட்டத்தின் தீவுப்பகுதி யில் தரைத்தோற்றம் என்பது சாதாரண, ஏனைய நிலப்பகுதியை விட மிகவும் தாழ் நிலமாக காணப்படுகின்றது.

தாழ் நில பிரதேசத்தில் தொடர்ச்சியாக அகழ்வு பணிகள் முன்னெடுக்கின்ற போது பலவீனமான பாறை உள் அமைப்பு கள் ஏற்படுத்தப் படக்கூடிய நிலை தோற்றுவிக்கப்படும்.

இயற்கை அனர்த்தம் ஏற்படுகின்ற போது மிக மோசமாக இத்தீவு பாதிக்கப் படும். புவிச் சரிதவியலாளர்கள் எச்சரிக் கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. மேலும் யுனெஸ்கோவின் அறிக்கையின் படி மன்னார் தீவு அழிகின்ற ஒன்றாக காணப்படுகின்றமையினால் அதை பாது காக்க வேண்டும் என்ற எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மன்னார் தீவில் 3 மாடிகளுக்கு மேல் கட்டடங்கள் கட்ட இன்று வரை அனுமதி இல்லை.

இந்த விவகாரங்களை அடிப்படை யாகக் கொண்டு மன்னார் தீவுப் பிரதேசத் தில் காற்றாலை தொடர்ந்து அமைக்க கூடாது.

தொடர்கின்ற பணியை உடனடியாக நிறுத்த வேண்டும். தீவுக்கு வெளியில் அல்லது வேறு பிரதேசத்தில் இந்த காற்றாலைகள் அமைக்க முடியும்.

நிபுணர்களின் கூற்றின் பிரகாரம் மன்னார் தீவுக்கு அப்பால் உள்ள பிர தேசங்களிலும் கூட அதனை விட கூடிய அளவு காற்று கிடைக்கக் கூடிய சந்தர்ப் பம் உள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எல்லா விடயங்களிலும் மன்னாரை மையப்படுத்தி இங்கு வாழ்கின்ற மக்களு டைய அடிப்படை வாழ்வாதார வாழ்வி யல் நிலைப்பாட்டை குழப்புகின்ற நிலைப் பாடு தோற்றுவிக்கப்படுகிறது. எனவே இவற்றை முற்றாக எதிர்க்கின்றோம்.

இவ்விடயங்கள் தொடர்பாக ஜனாதி பதி, மின்வலு சக்தி அமைச்சர். வட மாகாண ஆளுநர், இந்தியத் தூதரகம் போன்றவற்றிற்குக் கடிதம் எழுதுவதோடு. அவர்களையும் நேரில் சந்தித்து இவ் விடயங்களை எல்லாம் தெளிவு படுத்தி, மன்னார் தீவுக்குள் இந்தக் காற்றாலை அமைக்கும் பணியை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை விடுக்க உள் ளோம். – என அவர் மேலும் தெரிவித் தார்.



# மலையக மார்க்கத்தில் ரயில் சேவை பாதிப்பு!

ரயில் தடம்புரண்டதால் மலையக மார்க்கத்தில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளைக்கும் தியத்தலாவைக்கும் இடையில் ரயில் தடம்புரண்டுள்ளது என ரயில்வே போக்குவரத்து அத்தியட்சகர் எம்.ஜெ. இத்திபொல தெரிவித்துள்ளார்.

பதுளையிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலே இவ்வாறு தடம்புரண்டுள்ளது.

இத்த நிலையில், ரயிலை தண்டவாளத்தில் நிறுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.



# பாடசாலை மைதானத்தில் வெடிப்புச் சம்பவம் கம்பளையில் மூன்று மாணவர்களுக்கு காயம்

பாடாசாலை மைதானத்தில் ஏற்பட்ட வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த 3 மாணவர்கள் கம்பளை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கம்பளை கல்வி வலயத்துக்க உட்பட்ட மாவத்துர கலைமகள் தமிழ் வித்தியாலய பாடாசாலை மைதானத்திலேயே இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளதாக கம்பளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாணவர்களில் இருவர் சிகிச்சை பெற்று வீட்டுக்குத் திரும்பியுள்ள நிலையில், தரம் 6 இல் பயிலும் 11 வயதான மேலுமொரு மாணவன் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருகின்றார்.

பாடசாலை நேரத்தில், மேற்படி மூன்று மாணவர்களும் வெளியே வந்த போது பந்து போன்ற ஒன்று கிடந்துள்ளது. அதனை ஒருவர் உதைத்தைப்போது அந்தப் பொருள் திடீரென வெடித்துள்ளது.

இதன்போது உதைத்த மாணவனின் பாதணி சேதமடைந்ததோடு அவரின் காலில் கடுமையான காயம் ஏற்பட்டுள்ளது

விலங்குகளை வேட்டையாட பயன் படுத்தும் வெடி பொருள் ஒன்றே வெடித்து சிதறியதாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மாணவனின் தந்தை கூறுகிறார்.

இச்சம்பவம் இடம்பெற்று 01:35 மணியளவில் பாடசாலையினால் தனக்கு வழங்கப்பட்ட தொலைபேசி அழைப்பின் பிரகாரம், குறித்த இடத்திற்கு சென்ற போது பாடசாலையில் கரும் புகை சூழ்ந்திருந்ததாக அவர் தெரிவித்தார்.

இது குறித்து பாடசாலை அதிபர் கணேசன் புவனேஸ்வரியிடம் கேட்ட போது, வெடி விபத்து குறித்து யாரிடமும் கூற வேண்டாம் எனப் பொலிஸார் தெரிவித்தனர் என அவர் கூறினார்.

இது தொடர்பாக கம்பளை வலயக் கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோனிடம் வினவ முயன்றபோதும் முயற்சி பயனளிக்கவில்லை.

இந்நிலையில், இந்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்,

# இன்றைய ராசி பலன்கள் - 18.10.2023




இன்று சற்று மந்தமான நாள். இன்று சிறிது குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நெருங்கிய நண்பர்களுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளது. இசை கேட்பது மற்றும் பொழுது போக்கு நிகழ்சிகளில் கலந்து கொள்வது ஆறுதலை அளிக்கும்.

பணிகளில் இன்று மனநிறைவு காணப்படாது. உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

இன்று குழப்பமான மனநிலை காணப்படும். இந்த உணர்வை உங்கள் துணையிடம் காண்பிப்பீர்கள். எனவே உங்கள் துணையிடம் அமைதியான முறையில் நடந்து கொள்வதும் மகிழ்ச்சியாக இருப்பதும் சிறந்தது.

இன்று நிதிநிலைமை அனுகூலமாக இருக்காது. கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். சிறிதளவு முயற்சியில் அதிக வெற்றி காண்பீர்கள். இன்று நம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

கடினமான பணிகளைக் கூடஎளிதாக ஆற்றுவீர்கள். உங்கள் உறுதி மற்றும் பொறுப்பு காரணமாக பணிகள் சுமூகமாக நடக்கும். திட்டமிடுவதன் மூலம் இது சாத்தியம்.

நீங்கள் உங்கள் துணையிடம் அன்பாக நடந்துகொள்வீர்கள்.உன்கள் துணையை நட்கு புரிந்துகொண்டு நடந்து கொள்வீர்கள்.

பங்கு வர்த்தகம் மூலம் பணம் சம்பாதிக்கும் வாய்ப்பு உள்ளது. எதிர்பாராத பண வரவுகள் இன்று சாத்தியம்.

என்னுடைய ஆரோக்கியம் சிறப்பாக உள்ளது என்னும் உங்கள் நம்பிக்கையே இன்று உங்கள் ஆரோக்கியத்தை பராமரிக்க உதவும்.




சுய முயற்சியில் நல்ல பலன்களைக் காண்பீர்கள். இன்று காணப்படும் மகிழ்ச்சியும் திருப்தியும் உங்கள் முன்னேற்றத்திற்கு வழி வகுக்கும்.

பணி வளர்ச்சி ஸ்திரமாக இருக்கும். உங்களுக்கு கூடுதல் பொறுப்புகள் வழங்கப்படும். நம்பிக்கையுடன் அதனை எற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் நகைச்சுவை உணர்வுடன் இருப்பீர்கள். எனவே செயல்கள் யாவும் சுமூகமாக நடக்கும். உங்கள் துணையும் உங்கள் அன்பை புரிந்துகொண்டு நடப்பார். இதனால் உறவில் திருப்தி நிலவும்.

இன்று உங்களிடம் கணிசமான தொகை காணப்படும். அந்தப் பணம் உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமானதாக இருக்கும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




நல்ல சிந்தனை மூலம் சிறப்பான செயல்களுக்கு முயற்சி செய்வீர்கள். உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும் சக பணியாளர்களுடன் சிறந்த முறையில் கலந்து பழகுவதன் மூலம் புரிந்துணர்வை வளர்த்துக் கொள்ள இயலும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் தகவல் பரிமாற்றத்தில் இடைவெளி காணப்படும். இதனால் இருவருக்கும் இடையிலான புரிந்துணர்வு பாதிப்படையும். எனவே இதனை தவிர்க்கும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

இன்று பணம் சம்பாதிப்பது கடினமாக காணப்படும். சிறந்த முறையில் திட்டமிடுவது உதவிகரமாக இருக்கும்.

உங்கள் கண்களில் கவனம் செலுத்த வேண்டும். சளி மற்றும் நரம்பு பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




சில சமயங்களில் அமைதியின்மையை உணர்ந்தாலும் அறிவார்ந்த செயல்களை செய்யுங்கள். பொறுமையான அணுகுமுறை மேற்கொண்டால் சிறந்தது.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் மேலதிகாரிகளுடன் சில விரும்பத்தகாத தருணங்களை சந்திக்க நேரும்.

சில குடும்ப பிரச்சினை காரணமாக உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே கருத்து வேறுபாடு காணப்படும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து மகிழ்வீர்கள்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும்.




உங்கள் முயற்சியில் வெற்றி கிடைக்கும். நீங்கள் உங்கள் நடவடிக்கைகளை எளிதாக மேற்கொள்வீர்கள். இன்று அதிர்ஷ்டம் காணப்படும்.

பணியிடத்தில் நல்ல பலன்கள் காணப்படும். மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வதன் மூலம் மகிழ்ச்சியான தருணங்களை அனுபவித்து மகிழலாம்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். இந்த நேரத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு பயனுள்ள முதலீடுகளை செய்யுங்கள்.

ஆரோக்கியம் சிறந்த முறையில் இருக்கும். உடற்பயிற்சி மூலம் நீங்கள் சிறந்த ஆரோக்கியத்தை தக்க வைக்கலாம்.




பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு மன ஆறுதலை அளிக்கும். விவேகமான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது.

பணிநிமித்தமான பயணம் காணப்படுகின்றது. சிறந்த திட்டமிடல் மூலம் ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்கும்.

உங்கள துணையிடம் வன்மையாக நடந்து கொள்வீர்கள். நல்லுறவை பராமரிக்க அத்தகைய வன்மை உணர்வை தவிர்ப்பது நல்லது.

பண வரவு சுமாராக இருக்கும். கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்கள் மற்றும் கணுக்கால்களில் வலி ஏற்படலாம். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.




இன்று உறுதியுடன் இருக்க வேண்டிய நாள். நீங்கள் எடுக்கும் எந்த நடவடிக்கையையும் கவனமாக ஆற்றினால் வெற்றி நிச்சயம்.

பணியிடத்தில் சில விரும்பத்தகாத தருணங்கள் காணப்படும். சக பணியாளர்களுடன் அனுசரித்து செல்வதன் மூலம் நல்ல பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் இன்று அமைதியிழந்து உங்கள் துணையிடம் உணர்சிவசப்படுவீர்கள். எனவே இதனை தவிர்த்து அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

இன்று நீங்கள் பணத்தை இழப்பதற்கான வாய்ப்பு உள்ளது. எனவே பணத்தை கவனமாகக் கையாளவும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒவ்வாமை ஏற்படுத்தும் உணவுகளை உட்கொள்ள வேண்டாம். மன உளைச்சலுக்கு இடம் அளிக்காதீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 18.10.2023


தனுசு

ஆன்மீக ஈடுபாடு நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். இதுவே உங்களின் எதிர்கால போக்காக ஆகிவிடும்.

உங்கள் வளர்ச்சியில் தடைகளை ஏற்படுத்தும் சில தருணங்களைக் காண்பீர்கள். எனவே முன் ஜாக்கிரதையாக விழிப்புடன் அதனை எதிர்கொள்ளத் தயாராகுங்கள்.

உங்கள் துணையிடம் தேவையின்றி உணர்ச்சிவசப்படுவீர்கள். எனவே உங்களின் இந்தப் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். செலவுகளை கட்டுப்படுத்தும் வகைகளை கண்டறிய முயல வேண்டும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். உங்கள் பதட்டங்களை கட்டுப்படுத்தினால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.


கும்பம்

நீங்கள் எந்த விஷயத்தையும் இன்று எளிதாக எடுத்துக் கொண்டு வெற்றி காண்பீர்கள். உங்கள் விருப்பங்கள் எளிதில் நிறைவேறும்.

பணியிடத்தில் முன்னணியில் இருப்பீர்கள். உங்கள் முயற்சிக்கு பாராட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் சகஜமான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நீங்கள் மற்ற ஜோடிகளுக்கு உதாரணமாகத் திகழ்வீர்கள்.

எதிர்பாராத பண வரவு காணப்படும். அது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். கவனமாக திட்டமிட வேண்டும்.

இன்று பெரிய அளவில் ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. உடற்பயிற்சி மேற்கொண்டால் ஆரோக்கியத்தை சிறப்பாக வைத்துக் கொள்ளலாம்.


மகரம்

இன்றைய நாள் உற்சாகமான மகிழ்ச்சியான நாளாக இருக்கும். எனவே மகிழ்ச்சியுடன் இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

பணியில் முன்னேற்றங்கள் காணப்படும். புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

குடும்பத்தை அனுசரித்துப் போவதன் மூலம் இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்கலாம். மகிழ்ச்சியுடன் இருக்கலாம்.

இன்று உங்கள் சேமிப்பின் மூலம் பண வரவு காணப்படும். சேமிக்கும் ஆற்றல் அதிகரிக்கும்.

நீங்கள் உங்களை வருத்திக் கொள்ளாத வரையில் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். சிந்திப்பதை நிறுத்தி விட்டு செயல்களில் ஈடுபடுங்கள்.


மீனம்

இன்று நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். சுலோகம் சொல்வது மற்றும் தியானம் மேற்கொள்வதன் மூலம் இது சாத்தியம்.

பணியிடத்தில் வளர்ச்சி சுமூகமாக இருக்காது. அதிகமான பணிகள் உங்களுக்கு கடினமாக இருக்கும்.

குடும்ப பிரச்சினை காரணமாக அமைதியின்மை காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். எனவே ஒன்றாக அமர்ந்து பேசி பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை ஏற்ற இறக்கங்களுடன் காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. தோள் வலி மற்றும் முதுகு வலி காரணமாக பதட்டம் ஏற்படலாம்.


OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA

- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDD OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
20+ LOCATED CITIES 235+ CONDO PROJECTS 3500+ CONDO UNITS

KELSEY HOMES
40 Years Housing Excellence



S.Thumilan
Group Chairman
ACA, ACMA (UK), ACCA, CGMA, MCSI (UK), CPA (AUS), FMAAT (SL), ACS



CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
CENTRALPAR JA-ELA

HEAD OFFICE
No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.
Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546

JAFFNA OFFICE
No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna.
Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park



வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்

#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.

info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545

077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388

Northern Pc Park Npcpark northernpcpark Northern PC Park